1973 மார்ச் 29]

மணிமுத்தாறு நீர்

* 563 வினா.—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தார் நீர்த் தேக்கத்தில் மேல் பாசனத்திற்காக 50 அடி தண்ணீர் காக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பெருங்கால் ஆயக்கட்டு நிலங்கட்கு நீர் வழங்குவதற் கென சூன் முதல் மார்ச் மாதம் வரை மணிமுத்தார் நீர்த்தேக்கத்தில் குறைந்தது 50 அடி உயரம் தண்ணீர் வைக்கப்படல் வேண்டும். தண்ணீர்த் தட்டுப்பாடான காலங்களில் தாம்பிரபரணி ஆயக்கட்டு களின் பயிர்களைக் காப்பாற்ற மணிமுத்தார் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டத்தை 50 அடிக்குக் கீழே குறைத்தே ஆகவேண்டுமென ஓர் நிலை ஏற்படின் அவ்வாறு செய்வதற்கு முன், அரசின் ஒப்புதல் பெற வேண்டும். இவ்வாறு இந்நீர்த்தேக்கத்தில் 50 அடிக்கும் கீழ் நீர் மட்டம் குறையுங்கால் பெருங்கால் ஆயக்கட்டு நிலங்கட்கு தலையணை அணைக்கட்டிலிருந்து நீர் வழங்கப்படவேண்டும் என அரசாணை 472, (பொதுப்பணித் துறை), தேதி 16—2—1971-ல் அரசு ஆணை யிட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 50 அடிக்குக்கீழ் அந்த நீர்மட்டம் குறையும் என்றால் அரசின் அனுமதி பெற வேண்டும் என்று ஆணையிட்டிருப் பதாகச் சொன்னார்கள். இன்றைக்குக் கீழ்ப் பாசனத்திற்காகத் தண்ணீர் விடப்படுவதன் காரணமாக மேற்குப் பாசனம் எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல் பாதிக்கப்படுகிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஏற்கனவே, 1965-இல் ஒரு விதி இருந்தது. இந்த நீர்த்தேக்கத்தில், நீர் மட்டத்தின் அளவு பெருங்கால் மதகின் படிக்கட்டுக்குக் கீழே இருக்கும் போதெல்லாம் பெருங்கால் கால்வாய்க்குத் தேவையான நீர், தேவைப்படும்போது, கால்வாயையும் கரைகளையும் தரமாக

வைத்துப் பேணுவதன் மூலம், தலையணை அணைக்கட்டிலிருந்து பிரியும் பழைய நீர்க்கால் வழியாய் நீர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது அந்த விதியாகும்.

தமிழ்நாடு சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவினர் இதனைப் பரிசீலித்து, இதுபற்றிக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது. "தாமிரவருணி பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள பயிர்களைப் பாதுகாக்க வேண்டி குறிப்பிட்ட சில ஆண்டுகளில், தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து கூடுதலாக நீர் பெற வேண்டியிருந்தது என்றும், அவ்வாறு கூடுதலாக நீர்பெறும் ஒவ்வொரு தடவையும் அரசின் ஆணைகளின் கீழ்தான் அவ்வாறு பெறப்பட்டது என்றும் விவாதங்களின்போது குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், முன்கார் சாகுபடி குறைக்கப்பட வேண்டும் என்றும், பெருங்கால் ஆயக்கட்டுதாரர்களின் தற்போதுள்ள உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்றும், எல்லாவற்றிற்கும் மேலாக பெருங்கால் ஆயக்கட்டு பாசனத்திற்குப் பற்றுக்குறை இருக்க மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 50 அடிக்குக் குறையாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வலியுறுத்தி வந்துள்ளது. இந்த யோசனைப்படிதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு ச. சங்கமுத்து தேவர் : கோடைக் காலத்தில் ஏப்ரல், மே மாதங்களில் அட்வான்ஸ் கார் பயிருக்குத் தண்ணீர்விடுவதனால்தான் இந்தப் பிரச்சினையே எழுகிறது, ஆகவே ஏப்ரல், மே மாதங்களில் "அட்வான்ஸ் கார்"க்குத் தண்ணீர் தராமல் இருக்கும்படி செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : அப்படிச் செய்ய முடியாது. நூறு ஆண்டுகளாக இதுபோல அட்வான்ஸ் காருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : மின்சக்திக்குப் பயன்படுகிற பாபனாசம் நீர்த்தேக்கத்தில் இருந்துதான் "அட்வான்ஸ் கார்"-க்குத் தண்ணீர் கொடுத்தார்களே தவிர இந்த மணிமுத்தாறு அணையில் இருந்து அல்ல.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இதுபற்றி மாண்புமிகு அங்கத்தினருக்குச் சந்தேகம் இருந்தால் என்னிடம் வந்தால் விளக்கமாகப் பேசிக்கொள்ளலாம்.